IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
**OS.No.155/2015**

| DEPOSITION OF WITNESS | PW.1 |
|---|---|

| NAME | ஹரிகுமார் |
|---|---|

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of **05.11.2024**

**பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை**

1. இந்த வழக்கில் நான் தான் வாதி என்றால் சரிதான். தாவா சொதது டி.டி.மோட்டூரில் உள்ள விவசாய நிலம் என்றால் சரிதான். மொத்த விஸ்தீரணம் 1.75 எக்டர் ஆகும். சர்வே எண். 234/3 ஆகும்.

2. நான் இந்த வழக்கை முதலில் பிரகாசத்திற்கு எதிராக தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பிரகாசத்தின் தந்தை பெயர் இருசன் என்றால் சரிதான். தாவா தாக்கல் செய்யும் போது பிரகாசனின் தந்தை பெயர் ராமசாமி என்று குறிப்பிட்டு தாவா தாக்கல் செய்து பின்பு மனு தாக்கல் செய்து இருசன் என்று திருத்தம் செய்தேன் என்றால் சரிதான்.

3. நான் முதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். தாவா பிரகாரம் எனது முதல் பிரமாண வாக்குமூலம் பிரகாரம் தாவா சொத்து முதலில் ஐயாசாமி போஜனுக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அய்யாசாமி போஜன் எனது தந்தையின் தந்தை எனது தாத்தா ஆவார்.

4. எனது தந்தையார் பெயர் ரங்கன். எனது தந்தையார் உடன் பிறந்தவர்கள் எனது அத்தை ரங்கம்மாள் ஆவார். ரங்கம்மாவிற்கு 4 பிள்ளைகள், அவர்கள் ரேவதி, சித்ரா, அந்தோணி, கிருஷ்ணன் ஆவார்கள். எனது உடன் பிறந்தவர்கள் கிருஷ்ணமூரத்தி, தனசேகரன், அனிதா, டில்லிபாபு, எனது தாயார் பெயர் ருக்கு ஆவார். எனது தந்தை 2011 ஆம் ஆண்டு இறந்து விட்டார்.

5. எனது தந்தைக்கும், எனது அத்தைக்கு இடையே பாகபிரிவினை ஏதும் செய்யவில்லை என்றால் சரிதான். எனது அத்தையின் பிள்ளைகளை இவ்வழக்கின் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது வழக்கில் எனது அத்தை பற்றியோ அவரது வாரிசு பற்றியோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

6. எனது தாயார் மற்றும் எனது உடன் பிறந்தவர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது வீட்டில் நான் தான் மூத்த மகன். எனது தந்தை ரங்கனுக்கும், பிரதிவாதியின் தந்தை இருசனுக்கும், பிரதிவாதியின் தாத்தா பெருமாளுக்கும் தாவா சொத்து சம்பந்தமாக 30 ஆண்டுகளாக பிரச்சனை உள்ளது என்றால் சரிதான்.

7. இந்த வழக்கை நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோரி தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையில் இந்த சொத்து எனக்கு சொந்தமில்லை என்று பதிலளித்துள்ளார் என்றால் சரிதான்.

8. இன்றைய தேதி வரை விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றாலும் எந்த திருத்தமும் செய்யவில்லை என்றால் சொத்து என்னுடையது என்பதால் நான் ஏன் விளம்புகை பரிகாரம் கேட்கவேண்டும். கடந்த 30 ஆண்டுகளாக சொத்து குறித்து பிரச்சனை உள்ளதால் விளம்புகை பரிகாரம் கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல.

9. நான் முழுமையான தரப்பினர்களை வழக்கில் சேர்க்காமல் தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் தாவா சொத்தின் முழு உரிமையாளர் நான் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து அய்யாசாமி போஜனுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆதாரமாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் அவருக்கு எப்படி பாத்தியப்பட்டது என்ற விவரமும் தாவாவில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல குறிப்பிடுள்ளேன்.

10. தாவா சொத்து அய்யாசாமி போஜனுக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. அதனால் தான் தாவாவில் அய்யாசாமி போஜனுக்கு எப்படி பாத்தியபட்டது என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அய்யாசாமி போஜன் தாவா சொத்து குறித்து நிறைய வழக்குகள் தாக்கல் செய்துள்ளார் என்றால் எதற்காக தாக்கல் செய்தார் என்று எனக்கு தெரியாது எனது வழக்கறிஞர் சொல்லி வழக்கு தாக்கல் செய்தார் என்று எனக்கு தெரியும்.

11. இதற்கு முன்பு இருந்த வழக்கறிஞர் சொல்லி எனக்கு தெரியும். இந்த வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையில் எனது தாத்தா தாக்கல் செய்த வழக்கு விவரத்தை பற்றி குறிப்பிட்டுள்ளனர் என்றால் சரியல்ல.

12. இந்த வழக்கை நான் தாக்கல் செய்தேன். இந்த வழக்கை பிரகாசத்திற்கு எதிராக தாக்கல் செய்தேன். இந்த வழக்கிற்கு பிரகாசம் பதிலுரை தாக்கல் செய்துள்ளார். அந்த பதிலுரையை நான் படித்து பார்க்க வில்லை. இவ்வழக்கில் பிரகாசம் என்ன பதிலுரை தாக்கல் செவ்த விவரம் எனக்கு தெரியும்.

13. எனது தாத்தா அய்யாசாமி போஜன் உயிருடன் இருக்கும்போதே இவ்வழக்கின் பிரதிவாதியின் தாத்தா பெருமாள் மற்றும் அவர்களின் பிள்ளைகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு இதே தாவா சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் பதிலுரையில் சொல்லி உள்ளார்கள் என்றால் சரிதான்.

14. பதிலுரையில் என்னுடைய தாத்தா தாக்கல் செய்த அசல் வழக்கு எண. 66/1998 என்ற விவரத்தை குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். நான் முதலில் வைத்த வழக்கறிஞரை வைத்து தான் எங்கள் தாத்தா அவர் தாக்கல் செய்த வழக்கின் தாக்கல் செய்தார் என்றால் அதை ப்ற்றி எனக்கு தெரியாது. எனக்கு தமிழ் படிக்க தெரியும்.

15. என்னிடம் காண்பிக்கப்படும் தீர்ப்பாணையில் எனது தாத்தா மற்றும் எனது தந்தை பெயர் உள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கு எண். 66/1998 –ன் தீர்ப்பாணை எனது தாத்தா தாக்கல் செய்தது தான் என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை.

16. அசல் வழக்கு எண். 66/1998 என்ற வழக்கு வழக்கறிஞரை வைத்து முழுமையாக நடத்திய பின்பு 27.10.2010 அன்று தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

17. அசல் வழக்கு எண். 66/1998 பற்றி எனக்கு 2011 –ல் தான் தெரியும். 2011 ஆம் ஆண்டு எனது தந்தை வைத்த வழக்கறிஞரை சந்தித்து கேட்டேன். அவர் நிலம் சம்பந்கமாக வழக்கு தாக்கல் செய்த விவரத்தை கூறினார்.

18. பழைய வழக்கு பற்றி எனது தாவாவிலோ எனது முதல் பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அசல் வழக்கு எண். 66/1998 என்ற வழக்கு பற்றி தெரிந்தும் அதை மறைத்து இவ்வழக்கு தாக்கல் செய்ததால் நீதிமன்றத்தை ஏமாற்றிய காரணத்திற்காக மட்டுமே இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

19. ஏற்கனவே விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்த வழக்கில் தீர்ப்பான பின்பு சுமார் 16 ஆண்டுகளுக்கு பின்பு மீண்டும் புதிய வழக்கு தாக்கல் செய்தது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

20. தாவா சொத்து சம்பந்தமாக எனது தாத்தா அய்யாசாமி போஜன் மரகதம்மாளுக்கு எதிராக அசல் வழக்கு எண். 694/1996 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கு பற்றி எனக்கு தெரியும் என்றாலும் அந்த வழக்கு முழுமையாக நடத்தி தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்பட்டது தெரிந்தும் வேண்டுமென்றே அதை மறைத்து இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

21. பிரதிவாதிகள் பதிலுரையில் பழைய வழக்குகளை பற்றி விவரங்களை குறிப்பிட்டு பதிலுரை தாக்கல் செய்த பின்பும் அந்த வழக்கு விவரங்களை கேட்டு தெரிந்து கொண்டு அதன் விவரங்களை எனது முதல் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

22. இறுதி நிலை அடைந்த வழக்கை நான் மறுபடியும் அந்த சொத்தில் பிரச்சனை ஏற்படுத்துவது சட்டப்படி செல்லத்தகக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தவறு என்றால் சரியல்ல.

23. தாவா சொத்து விவரத்தில் 4 பக்க எல்லைகள் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு ம்எனது தகப்பனாருக்கும் உரிமை இல்லை என்றால் சரியல்ல. எனது தாவாவிலும், முதல் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்பதால் தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. எனது வழக்கு தவறான வழக்கு என்பதல் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/.M.N.Rajanandhivarmasiva,
District Munsif,
Gudiyattam.